# நாம்
# வித்தியாசமானவர்கள்



ஆசீஸ் ராய்ச்சூர்

**இலவச விநியோகத்திற்கு மட்டுமே**

இந்தியாவின் பெங்களூரு, ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்ட் அவுட்ரீச் தயாரித்து விநியோகித்தது.
முதல் பதிப்பு அச்சிடப்பட்டது: நவம்பர் 2018
திருத்தப்பட்ட பதிப்பு: ஏப்ரல் 2004
தமிழில் மொழியாக்கம்: ஏப்ரல் 2021

தொடர்பு தகவல்:
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: **apcwo.org**

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத மேற்கோள்களும் புனித பைபிளான புதிய கிங் ஜேம்ஸ் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமை © 1982 தாமஸ் நெல்சன், இன்க்., அனுமதியால் பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

விவிலிய வரையறைகள், ஹீப்ரு மற்றும் கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள் பின்வரும் ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றன:

Thayer's Greek Definitions. Published in 1886, 1889; public domain.
Strong's Hebrew and Greek Dictionaries, Strong's Exhaustive Concordance by James Strong, S.T.D., LL.D. Published in 1890; public domain.
Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words, © 1984, 1996, Thomas Nelson, Inc., Nashville, TN.

**நிதி பங்குதாரர்**
ஆல் பீபிள்ஸ் சர்சீன உறுப்பினர்கள், கூட்டாளர்கள் மற்றும் நண்பர்களின் நிதி உதவி மூலம் இந்த வெளியீட்டின் உற்பத்தி மற்றும் விநியோகம் சாத்தியமானது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் வளப்படுத்தப்பட்டிருந்தால், ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை தயாரித்து விநியோகிக்க உதவ நிதி ரீதியாக பங்களிக்க உங்களை அழைக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give ஐப் பார்வையிடவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு செய்வது என்பது குறித்து இந்த புத்தகத்தின் பின்புறத்தில் உள்ள "ஆல் பீபிள்ஸ் சுரச்சசுடனான கூட்டாளர்" பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**அஞ்சல் பட்டியலில்**
ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்தும் இலவச வெளியீடுகள் வெளியிடப்படும்போது அறிவிக்க, நீங்கள் apcwo.org இல் எங்கள் அஞ்சல் பட்டியலுக்கு குழுசேரலாம்.

# நாம் வித்தியாசமானவர்கள்

# உள்ளடக்கம்


1. இருளிலிருந்து வெளிச்சத்தில் வாழ அழைப்பு ........................................ 1
2. உலக கலாச்சாரமும், கடவுள் வார்த்தையும் ........................................ 8
3. நாம் வித்தியாசமானவர்கள் ........................................ 10

# 1. இருளிலிருந்து வெளிச்சத்தில் வாழ அழைப்பு

**1 பேதுரு 2:9**
**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.**

நீங்களும் நானும், கடவுளுக்குச் சிறப்பான மக்கள். நீங்கள் இயேசுவை நம்பி வாழ, மறுபடியும் பிறந்த கிறிஸ்தவரெனில் அந்த சிலாக்கியத்தைப் பெறுகிறீர்கள். அவ்வாறான நீங்கள் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட சந்தியார்கள், இராஜ மதிப்பிற்குரிய பூசாரிகள், சுத்தமான சமுதாய மக்கள், அவருக்குச் சொந்தமான சிறப்பான மக்கள் என்று வேதாகமம் விளக்குகிறது. ஏனெனில், இருளான வாழ்க்கை வாழந்துகொண்டிருந்த நாம், கடவுள் எவ்வளவு சிறப்பானவர், நல்ல குணமுள்ளவர், உயர்ந்த எண்ணமுள்ளவர் என்று மக்களுக்கு சொல்லும்படி, அவரைப் புகழ்ந்து பேசும்படி அவர் நம்மை அழைத்திருக்கிறார். ஆகவே, மக்கள் உங்களைப் பார்க்கும்பொழுது, கடவுள் எவ்வளவு சிறப்பானவர், உத்தமமானவர், குறையே இல்லாத நல்லவர் என்று நம்மை அழைத்த கடவுளைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும். கடவுள் எவ்வளவு நல்லவர் என்று காட்டுவதற்காகவே நீங்களும் நானும் இந்தப் பூமியில் இருக்கிறோம்.

இருளான வாழ்க்கை வாழ்ந்த நம்மை வெளிச்சத்தில் வாழவேண்டும் என்று கடவுள் அழைத்திருக்கிறார் என்று வேதாகமம் கூறுகிறது. ஏனெனில், ஒருகாலத்தில் நாம் வாழ்ந்த வாழ்க்கைச் சூழல், இருள் நிறைந்ததாக இருந்தது. நம்முடைய நினைவுகள், பழக்க வழக்கங்கள், கலாச்சாரத்தில் அதின் தாக்கங்கள் இருந்தது. ஆனால், கடவுள் நம்மை அதிலிருந்து வெளியே இழுத்துக்கொண்டு வந்து, வெளிச்சத்தில் வாழவைத்திருக்கிறார். இப்பொழுது, நாம் வாழும் சூழல்

வெளிச்சம் நிறைந்தது. அந்த வெளிச்சம், நம்முடைய சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், கலாச்சாரத்தை வடிவமைக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் இருளுக்கு இடமில்லாதபடி, வெளிச்சத்தில் வாழ்கிறபடியால், நாம் உண்மையிலேயே வித்தியாசமானவர்கள். ஆமென்.

# இருள்–புதிய ஏற்பாடு விளக்கம்

## கெட்ட செயல் செய்கிறவர்கள் ஒழிந்துகொள்கிற இடம், இருள்

**யோவான் 3:19**
**ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.**

மனிதர்களுடைய செயல்கள் கெட்டவைகளாக இருக்கிறபடியால், அவர்கள் வெளிச்சத்தில் வாழ்வதைவிட இருளில் வாழ்வதையே விரும்புகிறார்கள். ஏனெனில், இருள்தான் அவர்களுக்கு ஒழிந்துகொள்ள ஏதுவான இடமாக இருக்கிறது.

## சாத்தானின் சக்தி

**அப்போஸ்தலர் 26:18**
**அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.**

பவுலிடம் தேவன், "நீ மக்களை இருளில் இருந்து வெளிச்சத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். சாத்தானின் சக்தியிலிருந்து, தேவனிடம் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, இருள் என்ற வார்த்தை சாத்தானின் சக்தியையே குறிக்கிறது.

## ஆவிக்குரிய வாழ்வில் குருடர்கள்

**ரோமர் 2:19**
**நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும், அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும்,**

## இரட்சிக்கப்படாதவர்களின் சூழல்

**2 கொரிந்தியர் 6:14-15**
**14 அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?**
**15 கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?**

மேலுள்ள வேதபகுதியில் இருள் என்பது, சாத்தான் ஆளுகை செய்யும் மனிதர்களான இரட்சிப்படையாதவர்கள், நீதிமான்களாக மறாதவர்களைக் குறிக்கிறது.

## இருளாதிக்கம் செய்யும் சாத்தானின் ஆளுகைகள்

**எபேசியர் 6:12**
**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.**

இருளாதிக்கம் செய்யும் சாத்தானோடு நாம் போராடவேண்டியுள்ளது. ஆகவே, இதன்மூலம் மீண்டும் நாம் புரிந்துகொள்ளவேண்டியது, இருள் என்பது, சாத்தான் வேலைசெய்கிற இடமாகும். அந்த இடத்தில் இருப்பது நிச்சயம் நல்லதாக இருக்காது.

# புதிய ஏற்பாட்டில் ‘வெளிச்சம்’ என்பதின் விளக்கம்

இயேசுவை நம்பி வாழ ஆரம்பித்துள்ள நமக்குள்ள நம்பிக்கை, அவர் நம்மை இருளின் ஆதிக்கத்திலிருந்து, வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளார் என்பதாகும்.

## இயேசு வெளிச்சமாக இருக்கிறார்

ஆகவே, இயேசுவைப் பின்பற்றி வாழ்கிறவர்கள், இருளில் வாழமாட்டார்கள்.

**யோவான் 8:12**
**மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.**

**யோவான் 12:46**
**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.**

வெளிச்சம் என்பது, நம் வாழ்வை ஆளும் இயேசு இராஜாவின் ஆளுகையைக் குறிக்கிறது

**கொலோசியர் 1:12-13**
**12 ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,**
**13 இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.**

## பகலுக்குரிய பிள்ளைகள்

**1 தெசலோனிக்கேயர் 5:4-5**
**4 சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே,**
**5 நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே.**

கடவுள் வெளிச்சமாக இருக்கிறார்; அவருக்குள் இருள் என்பது கொஞ்சம்கூட இல்லை; ஆகவே, வெளிச்சம் என்பது இங்கே கடவுள் வசிக்கிற இடத்தைக் குறிக்கிறது.

நாம் வித்தியாசமானவர்கள்

**1 யோவான் 1:5-6**
**5 தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.**
**6 நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல்**

**எபேசியர் 5:8,11**
**8 முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்.**
**11 கனியற்ற அந்தகாரக்கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.**

ஒரு காலகட்டத்தில் நாம் இருளான வாழ்க்கை வாழ்ந்துவந்தோம். ஆனால், இப்பொழுது கிறிஸ்துவுக்குள் வெளிச்சமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். ஆகவே, இப்பொழுது இருளில் வாழ்கிறவர்கள் செய்கிறதுபோன்ற கனியற்ற செயல்களைச் செய்யக்கூடாது.

**ரோமர் 12:1-2**
**1 அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ளஆராதனை.**
**2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**

**ரோமர் 12:2, தி மெசேஜ் வேதாக மம்**
**யோசனையே செய்யாமல் உங்கள் கலாச்சாரத்தோடு ஒத்துவாழப் பழகிக் கொள்ளாதீர்கள்.**

ஒத்துவாழப் பழகுதல் என்பது மற்றவர்களைப் போன்ற தோற்றம், நடைஉடை பாவனைகளை ஏற்றுக்கொள்வதாகும்.

அது இந்த உலகத்தார்களின், நடை உடை பாவனைகள், பழக்க வழக்க முறைகளைக் குறிக்கிறது.

அய்யோன் என்ற கிரேக்க வார்த்தை, ஒரு கால தலைமுறை மக்களைக் குறிக்கிறது.

மறு உருவம் என்பது, மற்றொரு நிலைக்கு மாறுதலைக் குறிக்கிறது.

இயேசுவை நம்பி வாழ்கிற நம்முடைய வாழ்க்கை முறையிலே, உண்மையிலேயே ஒரு அசாதாரண வித்தியாசம் இருக்க வேண்டும். நாம் ஒரு காலத்தில் இருளில் வாழ்ந்துவந்தோம். ஆனால், இப்பொழுது வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாறியபடியால், கிறிஸ்துவின் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். கிறிஸ்துவின் வெளிச்சத்தில் நடக்கவேண்டும் என்பதின் பொருள், ஒரு இடத்தைத் நோக்கிப் பயணிக்க வேண்டும் என்ற பொருள் மாத்திரமல்லாமல், நம்முடைய முழு வாழக்கையையும் குறிக்கிறது. நாம் வாழும் வழிமுறைகள், நம்முடைய நடத்தைகள், நம் வாழ்வின் சாராம்சங்கள் அனைத்தும் இருளில் வாழ்பவர்கள் போல் அல்லாமல், வெளிச்சத்தில் வாழ்பவர்கள் வாழ்வு எப்படியிருக்க வேண்டுமோ அதைக் குறிக்கிறது. வெளிச்சதில் வாழ்பவர்களோடு சேர்ந்து நாம் வாழவேண்டுமானால், இருளில் வாழ்பவர்களை எதிர்த்து வாழவேண்டியதும் அவசியம். ஏனெனில், இந்த உலகம் இருளானது, அந்த இருளுக்கு எதிரான ஒரு வாழ்க்கை நாம் வாழவேண்டும். அப்படி நாம் வாழ்வது மற்றவர்களுக்கு வித்தியாசமாக, அவர்களால் நம்மைப் புரியமுடியாத அன்னியனாக நாம் இருப்போம். ஏனெனில், நாம் வெளிச்சமாக இருக்கிறோம். இருளில் வாழ்கிறவர்களுக்கு முற்றிலும் எதிரனான ஒரு வாழ்க்கை வாழ்கிறோம்.

நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக வாழவேண்டும் என்று கடவுள் புத்தகமும் நமக்குப் போதிக்கிறது. ஆகவே, இருளில் வாழ்கிறவர்கள் பயணிக்கிற பாதைக்கு எதிர்திசையில் நாம் பயணிக்கிறோம். ஆகவே, நாம் வித்தியாசமானவர்கள். கனியற்ற இருளான செயல்களோடு நாம் ஒத்துப்போகாமல், அவர்களுடைய இருள் வாழ்வின் தன்மைகளை நாம் வெளிப்படுத்துகிறோம். ஏனெனில், நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் ஆனபடியால், நாம் அந்த வெளிச்சத்தின்படி வாழவேண்டும். ஐக்கியம் என்று நாம்

பேசும்பொழுது, ஒரு படகில் பயணிக்கிற இருவரின் காட்சி கண்ணில் தோன்றுகிறது. இருளோடு ஐக்கியமுள்ளவர்களோடு சேர்ந்து நாம் பயணிக்கக் கூடாது என்று கடவுளுடைய புத்தகம் நம்மை எச்சரிக்கிறது. மாறாக, அவர்களுடைய இருள் வாழ்க்கை அவர்களுக்கு என்ன பாதிப்பைக் கொண்டுவரும் என்று நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டியதுள்ளது. அதே வேளையில், வெளிச்சம் என்ற படகில் பயணிக்கிற நாம், நம்முடைய வாழ்வை அந்த வெளிச்சத்திலேயே வாழ பழக்குவிக்க வேண்டும். இந்து உலக மக்கள் இருள் என்ற படகில் பயணிக்கும்பொழுது, நாம் அந்த படகிற்குத் தாவ நினைக்கக்கூடாது. அதாவது, இருளில் வாழ்கிறவர்களோடு ஐக்கியமோ, அவர்கள் செய்கிற செயல்களைச் செய்வதோ கூடாது. நாம் வெளிச்சத்தில் வாழ்கிறவர்களாகையால், அவர்கள் செய்கிற செயல்களோடு ஒத்துப்போக்கூடாது.

இந்த உலக வழக்கத்தின்படி வாழ்கிறவர்களோடு நாம் பங்காளிகளாகாமல், கடவுள் வார்த்தையால் நாம் மறுஉருவம் ஆகவேண்டும் என்று அவர் புத்தகம் போதிக்கிறது. இதில் மறுஉருவம் என்பதற்கான கிரேக்க மொழி வார்த்தை, மெட்டமோர்போஸ் என்பதாகும். அது ஒரு புழு வண்ணத்துப் பூச்சியாக மாறுவதின் பொருளை உள்ளடக்கியுள்ளது. ஆகவே, நாமும் நம்முடைய சிந்தை, பழக்க வழக்கங்கள், உருவத்தில் ஒரு மாற்றத்தை காண வேண்டும். இந்த உலக மக்களின் பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள், வாழ்க்கை முறைகள், மற்றவர்களோடான அணுகுமுறைகள் போன்று நம்முடைவைகள் இருக்கக் கூடாது.

நாம் மறுரூபம் அடையும்பொழுது, நாம் இந்த உலக மக்கள் வாழ்வதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களாகிறோம். ஆகவே, நீங்களும் நானும் இந்த உலக மக்கள் வாழ்வதுபோல வாழமுடியாது. நாம் இந்த உலக மக்கள் வாழ்வது போன்ற வாழ்விலிருந்து மாறி, மறுரூபம் அடைய கடவுள் நம்மை அழைத்திருக்கிறார்.

## 2. உலக கலாச்சாரமும், கடவுள் வார்த்தையும்

# நாம் வாழும் கலாச்சாரத்தைவிட கடவுள் வார்த்தை மிக உயர்ந்த அதிகாரமுடையதாகும்

நாம் வாழும் கலாச்சாரத்தில், வெளிச்சத்தின் தாக்கத்தைவிட, இருளின் தாக்கம் அதிகமாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த உலக கலாச்சாரத்தின்படி நாம் வாழாமல், கடவுள் நாட்டிலுள்ள வெளிச்சத்தின் கலாச்சாரத்தின்படி நாம் வாழ்கிறோம். அவர் நாட்டில் உள்ள கலாச்சாரம் எப்படிப்பட்டது என்று அவருடைய வார்த்தை நமக்கு விளக்குகிறது. இந்த உலக கலாச்சாரத்தின்படி வாழ்ந்தால், நம்மை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளும். ஆனால், அந்த கலாச்சாரம், கடவுள் வார்த்தைக்கு முற்றிலும் மாறுபட்ட கலாச்சாரமாக இருக்கலாம். ஆனால், நாம் கடவுள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும். நாம் வெளிச்சத்தோடு ஒத்து வாழும்பொழுது, நாம் வித்தியாசமானவர்களாகிறோம். நாம் வேறுபிரிக்கப்பட்ட மக்களாக வாழ்கிறோம். இருளில் வாழ்ந்த நம்மை, வெளிச்சத்தில் வாழ அழைத்த கடவுள் எப்படிப்பட்டவர் என்று அவரைப் புகழந்து வாழும் சிறப்பானவர்கள்.

**ரோமர் 12:2அ**
**எப்படியெனில், இந்த உலக மக்கள் அவர்கள் சொந்த ஆசைப்படி வாழவேண்டும் என தவறானவைகளை சிந்தித்து வாழ்கிறார்கள் அதுபோல நீங்கள் வாழாதீர்கள்.**

நம்மில் அனேகர், நாம் வாழும் கலாச்சாரம் அப்படிப்பட்டது என்று சொல்லி அனேக காரியங்களைச் செய்யலாம். ஆனால், அதின் விளைவுகள் எப்படிப்பட்டது என்று நினைத்துப்பார்க்காமல், ஒன்றையும் செய்யாதீர்கள் என்று கடவுள் புத்தகம் நம்மை எச்சரிக்கிறது. ஒன்றைக் குறித்து, நாம் வாழும் கலாச்சாரம் சொல்வதைவிட, கடவுள் வார்த்தை

என்ன சொல்கிறது என்று அறிதல் மிகமிக அவசியமாகும். ஒன்றைக் குறித்து, கடவுள் வார்த்தை என்ன சொல்கிறதோ, அதைப்பற்றி, நாம் வாழும் கலாச்சாரம் வேறுவிதமாகச் சொன்னால், கடவுள் வார்த்தை என்ன சொல்கிறதோ அதின்படியே நாம் வாழவேண்டும். ஆகவேதான், இந்த உலக மக்கள் அவர்கள் சொந்த ஆசைப்படி வாழவேண்டும் என தவறானவைகளை சிந்தித்து வாழ்கிறார்கள் அதுபோல நீங்கள் வாழாதீர்கள் என்று கடவுள் புத்தகம் நமக்குப் போதிக்கிறது.

கிரேக்க மொழியில், தலைமுறை என்பதற்கு "ஐயோன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அதற்கு, தற்போதய காலத்தில் வாழ்கிறவர்களின் பழக்க வழக்கங்கள் என்று பொருள். ஆகவே, நீங்கள் வாழ்கிற வாழ்க்கைச் சூழலின் கலாச்சாரப்படி வாழாமல், மறுரூபம் அடையுங்கள். இது கடவுளுடைய கட்டளை; மாறாக, கடவுளுடைய பரிந்துரை அல்ல. ஆமென்.

# 3. நாம் வித்தியாசமானவர்கள்

குறைந்தபட்சம் இரண்டு விசயங்களில் இந்த உலகத்தாற்களைவிட நாம் வித்தியாசமானவர்கள்.

## உண்மையும் உத்தமுமாக வாழ நாம் அற்பணிக்கப்பட்டவர்கள்

இந்த உலக மக்கள் இருளில் வாழ்கிறபடியால், உண்மையும் உத்தமுமாய் வாழவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்காது. ஆனால், நாம் வெளிச்சத்தின் மக்களாக வாழ்கிறபடியால், உண்மையோடும் உத்தமத்தோடும் வெளிச்சத்தின் பிள்ளைகளாக வாழவேண்டும்.

**1 பேதுரு 2:9-12**
**9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.**
**10 முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.**
**11 பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி,**
**12 புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

இருளில் வாழ்ந்த நம்மை வெளிச்சத்தில் வாழ அழைத்த கடவுளைப் புகழுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். கடவுள் செய்தவைகளை நம்பாமல் அவருக்கு அன்னிய இனமாக வாழ்கிற, இந்த உலக மக்கள் பார்வையில், நம்மூலம் அவர்கள் கடவுளுக்கு மதிப்பும் மரியாதையும்

கொடுக்கத்தக்க முறையில் நாம் வாழவேண்டும். நாம் உண்மையோடும் உத்தமத்தோடும் வாழ்கிறதைப் பார்க்கிற அவர்களுக்கு நாம் வித்தியாசமாக வாழ்கிற வாழ்க்கை புரியவேண்டும்.

**மாணவர்களாக**

உதாரணத்திற்கு, பள்ளியிலேயோ, கல்லூரியிலேயோ மாணவர்கள் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும்பொழுது, கவனித்துக்கொண்டிருந்த ஆசிரியர் வெளியே தேநீர் அருந்த சென்ற கொஞ்ச நேரத்தில், மாணவர்கள் அனைவரும் பார்த்து எழுத ஆரம்பிக்கிறார்கள். இயேசுவை நம்பி வாழ்கிற உங்கள் அருகில் அமர்ந்து பரீட்சை எழுதும் நபர், உங்களையும் பார்த்து எழுதச் சொல்கிறார். ஆனால், நீங்களோ அது தவறு நான் ஏமாற்ற விரும்ப வில்லை என்று சொல்கிறீர்கள். வெளியே சென்ற ஆசிரியர் வந்தால் சிக்கிக்கொள்வோமே என்று நினைத்து அவ்வாறு சொல்லாமல், நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளை என்பதை அறிந்து அப்படிச் சொல்கிறீர்கள்.

அதுபோலவே நீங்கள் உங்கள் வீட்டுப்பாடங்களைச் செய்யும்பொழுது, உங்களோடு படிக்கும் மற்றவர் எழுதியதைப் பார்த்து எழுதிவிட்டு, அதை நீங்கள் எழுதியதாக காட்டிக்கொள்ளக் கூடாது. ஏன் அப்படிச் செய்யக்கூடாது? ஏனெனில், நேர்மையாக, உத்தமமாக வாழ உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்கள்.

**உங்கள் வேலைகளில்**

வேலை செய்கிற நீங்களும் நேர்மையைக் கடைப்பிடித்து வாழவேண்டும். ஏனெனில், நீங்கள் ஒரு வேலைசெய்கிறவர்கள் மாத்திரமல்ல வெளிச்சத்தின் பிள்ளைகள். அது உங்களோடு வேலைசெய்கிற மற்ற இருளின் பிள்ளைகளிடமிருந்து உங்களை வேறுபடுத்திக் காட்டும். நீங்கள் இருவரும் ஒரே இடத்தில் ஒரேவித வேலைகளைச் செய்யலாம், ஆனால், நீங்கள் இருவரும் ஒருவரோடொருவர் மிகவும் வித்தியாசமானவர்கள். ஏனெனில், நீங்கள் நேர்மையாகவும், உத்தமமாகவும் வாழ உங்களை ஒப்புக்கொடுத்துள்ளபடியால், உங்கள் தகுதியைக் குறித்து நீங்கள் பொய்சொல்ல முன்வருதில்லை.

நான் முதலாவதாக வேலைக்காக விண்ணப்பிக்கும் வரை, பல்கலைக் கழகத்தில் என் முழு நேரத்தையும் ஆய்விற்காக செலவழித்தேன். பின்பு, பல்கலைக் கழகத்திலிருந்து வெளியே வேலைக்கு என்று செல்லும் நேரம் வந்தபொழுது, அனைவரும் செய்வதுபோலவே என் தகுதிகளைக் குறிப்பிட்டு வேலைக்கு விண்ணப்பித்தேன். அமெரிக்காவில் உள்ள நியூ ஜெர்சியில் ஒரு இந்தியரால் நடத்தப்படும் வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் நிறுவனத்திடம் என் நண்பர் என்னை அறிமுகப்படுத்தினார். அவர்கள் சொற்படியே எனக்கு நல்ல ஒரு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நான் விண்ணப்பித்தேன். பின்பு, அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து, என் விண்ணப்பத்தில் சில திருத்தங்கள் செய்யத் தேவைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் என் விண்ணப்பத்தில், நான் ஒரு நிறுவனத்தில் மூன்று வருடம் வேலை செய்த அனுபவம் இருப்பதாக அதில் திருத்தம் செய்திருந்தார்கள். ஆனால் அப்படி ஒரு வேலை செய்த அனுபவமே எனக்குக் கிடையாது. அந்த நிறுவனத்தின் பெயர்கூட எனக்கு உண்மையில் தெரியாது. ஆகவே, நான் எதைத் தெரிந்தெடுப்பது என்ற சூழ்நிலை. அதாவது, நான் அவ்வாறு வேலை செய்ததாக பொய்சொல்லி, அந்த வேலையில் சேர்ந்து, இருள் வாழ்க்கை வாழ்வது. அல்லது, உண்மையைச் சொல்லி அந்த வேலை கிடைக்கவில்லை என்றாலும், வெளிச்சத்தின் பிள்ளையாக வாழ்வது. கடைசியில், அவர்கள் திருத்தம் செய்த என் விண்ணப்த்தை நான் வேண்டாம் என்று சொல்லி, என் உண்மையான தகுதியை குறுப்பிட்டு, கடவுளுக்குச் சித்தமானால் உண்மையோடு வேலை செய்யும் ஒரு நிறுவனத்தில் வேலை கிடைக்கட்டும் என்று நேரடியாக விண்ணப்பித்தேன். அப்படியாக, நான் பொய் சொல்லாமலேயே, கடவுள் எனக்கு அந்த வேலையைக் கிடைக்கப் பண்ணினார்.

பின்பு, எங்கள் நிறுவத்தில் வேலைக்கு ஆட்களை தேர்வு செய்யும்பொழுது, எங்களுடைய தொழில் நுட்ப தேர்வில் வெற்றிபெற்ற ஒரு வாலிபர் ,நேர்முகத் தேர்விற்கு வந்திருந்தார். அவரிடம் நீங்கள் இதற்கு முன்பு யாரிடம் வேலை செய்தீர்கள்? என்று கேட்டபொழுது, அவர் ஒரு நிறுவனத்தின் பெயரைச் சொல்லி அந்த நிறுவனத்தின் மின்வலை விலாசத்தைக் கொடுத்தார். அந்த மின்வலை விலாசத்தில் தேடியபொழுது, அது, அவர் குறிப்பிட்ட ஒரு மென்பொருள் நிருவனம் அல்ல என்பதும், வெறும் ஆய்வு நிறுவனம் என்பதும் தெரிய வந்தது. அது குறித்து நான்

அவரிடம் விசாரித்தபொழுது, அவர்கள் ஒருவேளை தங்கள் மின்வலை விலாசத்தை மாற்றியிருக்கலாம் என்று சொன்னார். பின்பு நான் அவர்கள் அலைபேசி எண்ணைக் கேட்டபொழுது, தன்னுடைய சிம்கார்டை மாற்றிவிட்டதால், அந்த நிறுவனத்தின் அலைபேசி எண் தற்போது இல்லை என்றார். பின்பு அவரிடம் அந்த நிறுவனத்தின் லேன்ட் லைன் நம்பர் இருக்கிறதா? என்று கேட்டபொழுது, தனக்கு ஒரு நம்பரும் தெரியாது என்றார். அப்பொழுது நான் அவரிடம், அதெப்படி நீங்கள் ஒரு நிறுவனத்தில் ஒரு வருடம் வேலைபார்த்தும், அந்த நிறுவனத்தின் லேன்ட் லைன் நம்பரை நினைவில் வைத்துக்கொள்ளவில்லை. ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்த ஒருசில நாட்களிலேயே அந்த அலுவலக நம்பரை எத்தனை பேர்கள் நினைவில் வைத்துக்கொள்கிறார்கள் என்று கேட்டவுடன், அவர், தன்னுடைய விண்ணப்பத்தில் குறுப்பிட்ட அந்த அனுபவம் பொய் என்று ஒத்துக்கொண்டார்.

ஒரு நகரில் நடந்த கிறிஸ்தவ கூடுகையில் நான் 3 நாட்கள் பிரசங்கம் செய்தபொழுது, இதுபோன்ற வேறொரு அனுபவம் எனக்குக் கிடைத்தது. அப்பொழுது, பெங்களூர் நகருக்குப் புதிதாக வந்து, மென்பொருள் நிறுவனத்தில் வேலை தேடிக்கொண்டிருக்கும் ஒரு நபரை அந்த கூடுகைக்கு இடையில் நான் சந்தித்தேன். நான் அவருடைய பெயர், தகுதி, மற்றும் அனுபவங்களைக் கேட்டேன். அப்பொழுது அவர் மூன்று மாத படிப்பிற்குப்பின் ஒரு நிறுவனத்தில் 5 வருட வேலைசெய்த அனுபவம் உள்ளதாகக் கூறினார். அதைக் குறித்து நான் மேலும் விளக்கமாகத் தெரிந்துகொள்ள, பெங்களூர் வந்தவுடன் என்னைச் சந்திக்கச் சொன்னேன். அவ்வாறு அவர் என்னைச் சந்தித்தபொழுது, அவர் ஒரு போதகரோடு 2 வருடம் முழு நேர ஊழியம் செய்ததாகவும், பின்பு வேலைசெய்யும் நிர்பந்தத்தால் மூன்று மாத பயிற்சிக்குப் பின்பு வேலைக்கு விண்ணப்பிக்கும்பொழுது, 5 வருட அனுபவம் உள்ளதாகச் சொல்லி விண்ணப்பித்தார். அவர் மேலும், நீங்கள் ஒரு போதகர் என்பதாலேயே நான் அவ்வாறு சொன்னதாகவும் குறுப்பிட்டார். அவருக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியாதபோதிலும், அவர் உண்மையை ஒத்துக்கொண்டதை நினைத்து ஒருபக்கம் மகிழ்ச்சி. அதேவேளையில் இரண்டு வருடம் முழு நேர ஊழியத்தில் இருந்த ஒருவர், ஒரு வேலைக்காக இப்படிப் பொய் சொல்லலாமா என்ற கேள்வி என்ன மனதைவிட்டு நீங்கவில்லை.

நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக வாழவேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. அதின் பொருள் நாம் செய்யும் வேலைகளிலும், எதற்காகவும் உலகத்தோடு ஒத்துப்போகக் கூடாது. நீங்கள் ஊழியம் செய்தாலும், மற்ற வேலைகள் எது செய்தாலும், நிறுவனத்தின் பொருட்களைத் தவறாக பயன்படுத்தாதீர்கள். வேதாகமும் அதையே வலியுறுத்துகிறது.

**தீத்து 2:9-10**
**9 வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக,**
**10 தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல், எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்துகொள்ளவும், திருடாமலிருந்து, சகலவிதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லு.**

வேலைக்காரர்கள் தங்கள் எஜமான்களுக்கு கீழ்படிய வேண்டும். வேலை செய்கிறவர்கள் தங்கள் எஜமானுக்கு எல்லா விசயத்திலும் பிடித்தவராக நடந்துகொள்ள வேண்டும்; முரட்டுத்தனமாக நடக்கக் கூடாது, என்பது வேதாகமத்தின் கொள்கையாகும். மேலும், தங்கள் இரட்சகரின் குணத்தை வெளிப்படுத்தும் விதமாக, திருடாமல், எல்லாவிதத்திலும் உண்மையாக நடந்துகொள்ள வேண்டும். ஆகவே, உங்கள் நிறுவனத்தில் வேலை செய்கிற அனைவருமே தவறு செய்தாலும், கிறிஸ்தவராக வேலைசெய்கிற நீங்கள் அவர்கள் செய்கிற தவறுகளோடு ஒருபோதும் ஒத்துப்போகக் கூடாது. ஏனெனில், நீங்கள் வித்தயாசமானவர்கள். ஒருவேளை உங்கள் சம்பளம் போக, வேறு ஏதாவது அதிகமாக கிடைக்கும் வாய்ப்புகள் இருந்தாலும், அது நீங்கள் கடினமாக உழைத்து, சம்பாதிக்கும் சம்பளமே போதும் என்ற மனதோடு வாழவேண்டும். ஏனெனில், இருளில் வாழ்ந்த உங்களை வெளிச்சத்தில் வாழவேண்டும் என்று, கடவுள் அழைத்திருக்கிறார்.

பல்வேறு தவறுகளைச் செய்து, மிகமோசமாக வாழும் இந்த சமுதாயத்தில், நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று எப்படி வெளிப்படுத்தப் போகிறீர்கள்? அவ்வாறான மோசமான மக்கள் மத்தியில், நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று வெளிப்படுத்த, நீங்கள் குறைசொல்லாது, புலம்பாது, நேர்மையாக வாழவேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது.

**பிலிப்பியர் 2:14-15**
**14 நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,**
**15 கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,**

ஒரே நிறுவனத்தில் வேலைசெய்கிறவர்களோடு சேர்ந்து நீங்களும் மற்றவர்கள் மீது குறைசொல்லி, புலம்பிக்கொண்டிருந்தால், அவர்களுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? ஆகவே, நாம் மற்றவர்களைப் போல, குறைசொல்லிப் புலம்பாதபடி, நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் என்பதை மற்றவர்கள் உணரும்படி வாழவேண்டும். ஆமென்.

அதேவேளையில், தொழில் செய்து மற்றவர்களுக்கு வேலைகொடுக்கிறவர்கள், நமக்கு வேலை செய்கிறவர்களுக்குரிய சம்பளத்தை தீர்மானிக்கும்பொழுது, அவர்களை ஏமாற்றவோ, அவர்கள் சம்பளங்களைக் கொடுக்காமல் பிடித்து வைக்கவோ கூடாது.

**லேவியராகமம் 19:13**
**பிறனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலும் இருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம்மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது.**

உங்களுக்கு வேலை செய்கிறவர்களுக்கு சரியான நேரத்தில் நீங்கள் சம்பளம் கொடுக்க வேண்டும். சிலவேளைகளில் சம்பளத்தைப் பிடித்துவைத்துக்கொள்வது, இந்திய கலாச்சாரம் என்று சொல்லக்கூடாது. ஏனெனில், நாம் இந்த உலக கலாச்சாரத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல; மாறாக, கடவுள் நாட்டின் கலாச்சாரத்திற்குட்பட்டவர்கள். உன் வேலைக்காரர்களின் சம்பளத்தைப் பிடித்து வைத்துக்கொள்ளாதே என்று கடவுள் சொல்கிறபடியால், உங்களுக்கு ஒருவர் வேலை செய்தால், அவர் சம்பளத்தைச் சரியாகக் கொடுத்துவிடுங்கள்.

**எரேமியா 22:14**
**அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலிகொடாமல், அவனைச் சும்மா வேலைகொள்ளுகிறவனுக்கு ஐயோ!**

உங்கள் பக்கத்து வீட்டாரிடம் நீங்கள் வேலை வாங்கினால், அந்த வேலைக்குறிய கூலியை கொடுக்க மறக்காதீர்கள். உங்கள் வீட்டு வேலை

செய்கிறவர்களுக்கு, சரியான நேரத்தில் கூலிகொடுங்கள். மற்றவர்களைவிட வித்தியாசமானவர்களாக வாழுங்கள்!

என்னிடம் வேலை கேட்டு வருகிறவர்களிடம், நீங்கள் ஏன் உங்கள் முந்தய வேலையை விட்டீர்கள் என்று கேட்பேன். அவர்களில் சிலர், எனக்கு அவர்கள் சுமார் 6 மாதங்களாக சம்பளம் கொடுக்கவில்லை என்பார்கள். அவர்கள் அவ்வாறு சொல்லும் நிறுவனம் சுமார் 700 பேர்கள் வேலைசெய்யும் பெரிய நிறுவனமாகும். அவ்வாறான வேலை கலாச்சாரத்தை கடவுள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை.

பெங்களூரில் உள்ள ஒரு மிகப்பெரிய நிறுவனக் கான்ட்ராக்டர், பல லட்ச ரூபாய் முதலீட்டில் தன் வேலைகளை செய்துவருகிறார். ஆனால் தன் தொழிலார்களுக்கு 2 வருட சம்பளப் பாக்கி வைத்துள்ளார். வெளிச்சத்தின் பிள்ளைகளாகிய நாம், நம் பேச்சிலும், செயலிலும் நம் வாழ்வின் எல்லாச் சூழ்நிலையிலும் நீதி நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**எபேசியர் 6:9**
**எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்.**

நான் ஒருவரோடு கலந்துபேசும் பொழுது, அவர் என்னை ஒரு காப்பி குடிக்கச் சொன்னார். அப்பொழுது எங்களோடு அமர்ந்திருந்த இன்னொருவர் எனக்குக் காப்பி வேண்டாம், நான் இப்பொழுதுதான் காலை உணவு சாப்பிட்டேன் என்றார். என்னிடம் காப்பி குடிக்கச் சொன்னவரிடம், நீங்களும் என்னோடு சாப்பிடுங்களேன் என்றேன். அதற்கு அவர் வேண்டாம் நான் உபவாசம் என்றார். உடனே, இப்பொழுதுதான் காலை உணவு சாப்பிட்டேன் என்று சொன்னவர், அவரோடு சேர்ந்துகொண்டு, நானும் உபவாசம்தான் என்றார். அப்பொழுது, கிறிஸ்தவர்களாகிய நமக்குள் என்ன நேர்மை இருக்கிறது என்று நான் வியத்துபோனேன். உலகத்தார்களைவிட நாம் வித்தியாசமாக வாழவேண்டியவர்கள் அல்லவா? நாம் உலகத்தார்களோடு ஒத்துப்போகாமல், மறுரூபம் அடைந்து, கடவுள் எண்ணப்படி அவர் வழியில் வாழவேண்டியவர்கள் அல்லவா?

# நாம் சுத்தமாக, ஒழுக்கமாக வாழ அற்பணித்தவர்கள்

**1 பேதுரு 2:11**
**பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி,**

**ஆகவே, எனக்குப் பிரியமானவர்களே! உங்களுக்குக் இப்பொழுது கிடைத்த இந்த புதிய வாழ்வை அழிக்கும் எதிரியாக, உங்கள் பழைய வாழ்வு மாறி இருக்கிறது. ஆகவே, இந்த உலகில் நீங்கள் வாழும் மீதியான வாழ்வை ஒரு தற்காலிக வாழ்வாக நினைத்து வாழுங்கள். உங்கள் பழைய வாழ்வு, உங்களுக்கே மறந்துபோன ஒரு அன்னிய வாழ்வாக மாறிப்போகட்டும்.**

உடல் இச்சைகளுக்கு விலகி வாழுங்கள். இருளில் வாழ்ந்த நம்மை வெளிச்சத்தில் வாழ அழைத்தவரைப் புகழ்கிற நாம், உடல் இச்சைகளுக்கு விலகி வாழவேண்டும். ஏனெனில், நாம் சுத்தமாக, ஒழுக்கமாக வாழ நம்மை அற்பணித்திருக்கிறோம்.

## வாலிப பெண்கள்

கடவுளுக்குப் பிரியமாக வாழ்கிற ஒரு வாலிப பெண்ணாக ரெபேக்காள் செய்ன்ட் ஜேம்ஸைக் குறிப்பிடலாம். இவர் ஒரு கிறிஸ்த ராக் இசைக் கலைஞர். வாலிபர்கள் அனேகர்கள் விரும்பிக் கேட்கிற கிறிஸ்தவ பாடல்களை இவர் பாடுகிறார்.

பேமிலி.காம் என்ற வலைதளத்திற்கு, அமி குட்மேன் என்பவரோடான பேட்டியில், நாகரீகத்திற்கான அற்பணம் என்ற தலைப்பில், பின்வரும் செய்தியை நெபேக்காள் பகிர்ந்துகொண்டார்:

ஆபாசங்களை எப்படித் தவிர்ப்பது என்ற உணர்வை எனக்குநானே பல்வேறு விதங்களில் வகுத்துக்கொண்டேன். ஏனெனல், நான் உடுத்தும் உடைகள் சில ஆண்களுக்கு எப்படிப்பட்ட உணர்வுகளை தரும் என்று நான் உணர்ந்திருந்தேன். அதுமாத்திரமல்ல, எனக்குக் கணவனாக வரப்போகிறவர் அப்படிப்பட்ட ஆபாச கவர்ச்சியினால் இழுக்கப்பட்டவராக இருக்கக்கூடாது, சுத்தமனதோடு என்னை விரும்புகிறவராக இருக்கவேண்டும் என்று நான் தீர்மானித்திருந்தேன். ஆனால், நான் ஆண்களைக் கவரும் கவர்ச்சி உடைகளை அணிந்தால், ஆபாசத்தால் கவரப்படும் அதுபோன்ற ஆண்கள் எனக்குக் கிடைத்தாலும் பரவாயில்லை, நானும் அதுபோன்ற

சுத்தமில்லாதவள்தான் என்ற மனநிலை உள்ளவள் என்றல்லவா நான், என்னை அவர்களுக்குக் காட்டுகிறேன். அவ்வாறு இல்லாமல், நான் கவர்ச்சி, ஆபாசத்தைத் தரும் உடைகளை அணியாமல், நாகரீகமான உடை உடுத்துவதால், அதற்கு மதிப்பளிக்கிறவர்கள் மனதில் மட்டும் நான் அழகானவளாகத் தோன்றுவேன். அப்படிப்பட்டவர் மனதில் இடம்பிடித்து அவரைக் கணவனாகக் கொள்வதே எனக்கு சிறப்பு. ஆகவே, அதுபோன்ற உடைகளை உடுத்துவதே எனக்கு பிடிக்கிறது. உடலை இருக்கமாக காட்டும் உடைகள், உடலின் ஒருசில அங்கங்கள் வெளியே தெரியாதபடியான நவநாகரீக, அழகான உடைகளை உடுத்துவதே எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அப்படியான உடைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமே. ஆனாலும், நவநாகரீக உடையும் உடுத்தவேண்டும், ஏனைய என்னுடைய கிறிஸ்த சகோதரர்கள் இடருவதற்கு காரணமாகவும் இருக்கக்கூடாது என்றால் அப்படியான உடைகளைத் தேடிப்போராடுவதில் ஒரு பாரமுமில்லை.

சில வேளைகளில் என்னுடைய அப்பா என் உடைகளைப் பார்த்து, “இது பையன்களைக் கவரும் உடை” என்றும், நீ உடுத்தும் உடைகள் சாதாரணமானவர்கள் உடுத்துவதுபோல இல்லை என்றும் சொல்லி என்னைக் கேலிசெய்வார். ஆனால், என் உடை கவர்ச்சியாக இருந்தால் நேரடியாகவே வந்து எச்சரிப்பார். அதே வேளையில் என் அம்மா, அதைச் சமநிலைப் படுத்துவார். இவ்வாறாக, என் நடை உடை பாவனைகளைக் குறித்து என்னுடைய வாலிப வயதில் என் பெற்றோர்களின் இவ்வித கருத்துக்களால் நான் சமநிலையில் வாழ முடிந்தது. என்னுடைய அப்பா ஒரு பழைமைவாதியாக இருந்த போதிலும், என்னுடைய அம்மா உடுத்திய நாகரீக அதே வேளையில் உடலை வெளிக்காட்டாத உடைகள் என் உடைகளைத் தெரிவு செய்ய மிகவும் உதவியாக இருந்தது. அப்படி வாழவே நானும் விரும்பினேன். என் பெற்றோர்களுக்குப் பிடிக்காததையோ, மற்றவர்களை வெறுப்பூட்டும் எதையும் செய்ய நான் விரும்பிதில்லை. ஏனெனில் ஒரு கிறிஸ்தவளாக கடவுள் பர்வையில் நான் பொறுப்போடு வாழவேண்டும் என்பது என் கடமை என்பதையும் உணர்ந்திருந்தேன்.

நான் இசை உலகில் முதலாவது பிரவேசிக்க ஆரம்பித்த பொழுது, உடைமேல் ஒரு மேல் ஆடை (கோட்) போட்டு, அதை கீழாடைக்குள் சொருகிக்கொள்வது நாகரீகமாக இருந்தது. ஆகவே, அது எனக்கு எந்தவிதப் பிரச்சனைகளையும் தரவில்லை. ஆனால் தற்போதைய நாகரீக உடை என்பது, அதிகம் உடலை வெளிக்காட்டும் விதமாகவும், டீவி,

சினிமாக்களில் வருவதுபோன்ற உடைகளே கடைகளில் விற்பனைக்கு வருவதால், தற்போதைய நாகரீகத்திற்கு ஏற்ற உடையைத் தெரிவு செய்வதில் சிரமம் உள்ளது.

ஆகவே, நான் மேடைகளிலும் வெளியிலும் உடுத்தும் உடைகள் குறித்து சில வழிமுறைகளை வகுத்துக்கொண்டேன். மேடைகளில் ஏறி நான் ராக் இசைப் பாடல்கள் பாடுவதால், பாவாடை அணியாமல், பேன்ட் அணிவதுதான் சிறந்தது என்றும், அதேவேளையில் என் அங்கங்களின் சிறிய வளைவுகள் கூட வெளியே தெரியும்படி அதை மிக இருக்கமாக உடுத்தக்கூடாது என்றும் தீர்மானித்தேன். என்னுடைய மேலாடையைக் குறித்து நான் தீர்மானித்தது என்னவென்றால், ஆண்களின் இச்சையைத் தூண்டாதபடி, ஒரு மேலாடைக்கு மேல் இன்னொரு மேலாடையையும் போட்டுக்கொள்ள வேண்டும் என்பதாகும். எங்கள் திருச் சபைக்கு வந்த ஒரு பெண் பிரசங்கி, ஒருநாள் எங்களிடம், “பெண்கள் உடுத்திவரும் உடைகளைப் பார்க்கும்பொழுது, எங்களுக்கு எங்கே பார்வையைச் செலுத்துவது என்றே சங்கடமாக இருக்கிறது” என்று அங்கு வரும் வாலிபர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். அவர்கள் அங்கே வருவது தேவனைச் சந்திக்க, அவர் பிரசன்னத்தை அனுபவிக்க. அப்படியிருக்கும் பொழுது, சில பெண்கள் உடுத்திவரும் உடைகள் அவ்வளவு இறுக்கமாகவும், அங்கங்களை வெளியே காட்டுவதாகவும் இருக்கும்பொழுது அவர்கள் எதைப் பார்த்து கடவுளைத் தொழுதுகொள்ள முடியும். ஆகவே, பெண்கள் உடுத்தும் உடை ஆண்கள் மனதை சிதறப்பண்ணுவதாக இருக்கக்கூடாது. கிறிஸ்துவுக்குள் வாழ்கிற வாலிபர்களின் மனதைக் கவர்கிறவிதமாக, அதே வேலையில் கவர்ச்சி காட்டாமல் எப்படி உடை உடுத்த வேண்டும் என்பதைப் பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும். துரதிஷ்டவிதமாக அனேக பெணக்கள் இதைக் கற்றுக்கொள்வதே இல்லை.

இவ்வாறாக மிகப்பிரபலமான ரெபேக்கா சொன்ன கருத்துக்களில் மிக முக்கியமான கருத்தைக் கவனிக்கவும். நீங்கள் உடுத்தும் கவர்ச்சிகரமன உடைகள் “சில ஆண்களின்” இச்சைக்கு இறைபோடுகிறது என்று சொல்கிறார். நீங்கள் உடுத்தும் உடை அவ்வாறான ஆண்களின் இச்சைக்கு இறைபோடுவதாக இருந்தால், அவ்வாறான ஆண்களை நீங்கள் உங்களுக்குக் கணவனாகத் தெரிந்தெடுப்பீர்களா? உங்களில் சிலருக்கு அது இன்னும் புரியாததாகக்கூட இருக்கலாம். ஆனால், ரெபேக்கா சொன்னதில் அவ்வளவு அர்த்தம் நிறைந்துள்ளது.

பெண்கள் அழகாக உடை உடுத்த வேண்டும், அதே வேளையில் நாகரீகமான உடையும் உடுத்த வேண்டுமானல் தங்களுக்கு மாதிரியாக ரெபேக்காளின் உடைகளைக் கவனிக்கவும். அவர் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் பாடல்கள் பாடி, அனேக நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். அப்படியிருக்கும் பொழுது, அவருக்கு மக்கள் மனதில் இடம் பிடிக்கவேண்டும் என்ற ஆசையில் நல்ல உடை உடுத்தும் எண்ணம் இல்லாமலா இருக்கும். மக்கள் மத்தியில் இவர் மிகப்பிரபலமானவராக இருந்தபோதிலும், ஒரு கிறிஸ்தவராக தன் நடை, உடை பாவனைகளில் கவனம் செலுத்துவதைக் கவனமாகக் கடைப்பிடிக்கிறார்.

வாலிப பெண்களே! இந்த உலகில் வாழும் மற்ற பெண்களைவிடை நீங்கள் நடை, உடை, பாவணை, நாணம் போன்றவற்றில் சுத்தமானவர்கள், வித்தியாசமானவர்கள் என்பதை வெளிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளீர்கள். ஒருவேளை நீங்கள் அதில் கவனம் செலுத்தும்பொழுது, நீங்கள் ஒரு நாட்டுப்புறப்பெண், கிராமத்தாள் என விமர்சிக்கப்படலாம். ஆனால், கடவுள் பார்க்கும் அழுகு என்பது வெளிப்புற அழகு அல்ல; மாறாக உள்ளான உள்ளத்தின் அழகு என்பதையே வேதம் வலியுறுத்துகிறது.

**1 பேதுரு 3:3-4**
**3 மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்,**
**4 அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.**

நீங்கள் கடவுள் பார்வையில் அழகாக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது மனிதர்கள் பார்வையிலா என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

**1 தீமோத்தேயு 2:8-10**
**8 அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்.**
**9 ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,**
**10 தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.**

ஒரு ஜெபக்கூடுகை எப்படியிருக்க வேண்டும் என்று பவுல் விவரிக்கும் பொழுது, ஆண்கள் தங்கள் சுத்தமான கைகளை உயரமாக வானத்தை நோக்கித்தூக்கி, ஜெபிக்கவேண்டும் என்று சொல்லும்பொழுது, பெண்களும் தங்கள் நடை உடை, பாவனைகளில் எப்படியிருக்க வேண்டும் என்று விவரிக்கிறார். பெண்களின் உடையைப் பற்றி பவுல் ஏன் இங்கு பேசவேண்டும் என்னச் சிந்திக்கும்பொழுது, தற்போதைய திருச்சபைகளில் காணப்படுகிற அதே பிரச்சனை அங்கே இருந்திருக்கும் என சிந்திக்கத் தூண்டுகிறது. திருச்சபைக்கு வரும் ஆண்கள் தங்கள் சுத்தமான கைகளை வானத்தை நோக்கி விரித்து ஜெபிக்க முயற்சிக்கும்பொழுது, ஏதோ ஒன்று அவர்கள் பார்வையைக் கீழ்நோக்கி இழுப்பது போன்று காணப்படுகிறது. ஆகவேதான் திருச்சபைக்குச் ஜெபிக்க வரும் பெண்கள் தங்கள் உடைகளில் கவர்ச்சியில்லாமல், நேர்த்தியான உடைகளை உடுத்தவேண்டும் என்று பவுல வலியுறுத்துகிறார். தங்கள் கூந்தலைக் கவர்ச்சிகரமாக வைத்துக்கொள்வதையோ, தங்க ஆபரணங்களால் தங்களை அலங்கரித்துக்கொள்வதிலோ கவனம் செலுத்தாமல், கடவுள் மீதுள்ள பக்தியோடு செய்யவேண்டிய நல்ல செயல்கள்மீது கவனம் செலுத்த வற்புறுத்துகிறார். வாலிப பெண்களே நீங்கள் கடவுள் மீது உள்ள பக்தியால், சுயக்கட்டுப்பாடு உள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்தும் விதமாக, நேர்த்தியான உடைகளை உடுத்துங்கள். கிறிஸ்தவ பெண்களுக்குப் பவுல் சொல்லும் அறிவுரை, உங்கள் உடைமூலம் நீங்கள் கடவுள் பக்தியுள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள் என்பதாகும். ஆமென்! ஆகவே, நீங்கள் உங்கள் உடையை எவ்வாறு தேர்வு செய்கிறீர்கள்? என்னுடைய கடவுள் பக்தியை இந்த உடை மூலம் நான் வெளிப்படுத்த முடியுமா? என்று சிந்தியுங்கள். கடவுள் மீது நான் அன்பானவள் என்பதை இந்த உடை வெளிப்படுத்துமா என்பதை வைத்து உங்கள் உடைகளை நீங்கள் தேர்வு செய்யுங்கள்.

## பெற்றோர்

ரெபேக்காளின் பெற்றோர் அவர் வாழ்வில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் என்பதைக் கவனியுங்கள். அவர் ஒரு புகழ் பெற்றவராக இருந்தபோதிலும், பெற்றோர்கள் அவள் வாழ்வில், நடத்தையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. பெற்றோர்களே! நீங்கள் உங்கள் வாலிப பிள்ளைகளோடு பேச வேண்டும். நாங்கள் அவர்களை சபைக்கு அனுப்புகிறோம், போதகர்கள் போதிக்கிறார்கள் என்று சொல்லி தப்பிக்க நினைக்காதீர்கள்.

## முதிர் வயதான பெண்கள்

**தீத்து 2:4-5**
**4 தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும்,**
**5 தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு.**

மூத்த பெண்கள், வாலிப பெண்களுக்கு மாதிரியாக பேச்சிலும் நல்ல நடக்கையிலும் வாழ்ந்து, புத்திசொல்ல வேண்டும் என்று பவுல் சொல்கிறார். பேச்சிலும் நல்ல நடக்கையிலும் என்பதின் அர்த்தம், மென்மையாக, நேர்மையாக, சுத்தமாக, கபடமில்லாது, நடிக்காது வாழவேண்டும் என்பது பொருளாகும். இதுதான் கடவுள் சொல்லும் தகுதி.

வாலிப பெண்கள் கவர்ச்சியற்ற உடை உடுத்தவேண்டும் என்று சொல்லும்பொழுது, என் நண்பர்கள், மற்றவர்களெல்லாம் அப்படி உடை உடுத்தும்பொழுது, நான் மட்டும் ஏன் அப்படி செய்யக்கூடாது என்று வாக்குவாதம் பண்ணலாம். மேலும், அவர்கள் எங்கள் உடை ஆண்களுக்குக் கவர்ச்சி என்றால் அது அவர்கள் பிரச்சனை என்றும் கூறலாம். ஆனால் உண்மை என்னவென்றால், அவர்கள் அவ்வாறான உடை உடுத்துவது, அவர்களைப் போன்ற சிந்தை உள்ள ஆண்களையே அவ்வாறு கவர்கிறது என்ற உண்மையை அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஆகவே, அது அவர்களுக்கும் பிரச்சனைதான். மற்றவர்களின் பாலுணர்வைத் தூண்டும்படியான உடைகளை பெண்கள் உடுத்தக்கூடாது. வெளிச்சத்தின் பிள்ளைகளாக வாழ்கிற நீங்கள் கடவுளுடைய நற்குணத்தை வெளிப்படுத்துகிறவர்களாக, நேர்த்தியான உடைகளையே உடுத்த வேண்டும். நாம் மற்றவர்கள் இடறல் அடைய காரணமாக இருக்கக் கூடாது என்று மூத்த வயதுள்ள பெண்கள் இளம் பெண்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என கடவுள் வார்த்தை சொல்கிறது.

## வாலிப ஆண்கள்

**1 தெசலோனிக்கேயர் 4:3-5**
**3 நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,**

**4 தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல்,**
**5 உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப்பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து:**

கடவுள் நம்மை அழைத்தது ஒழுக்கமற்று வாழ்வதற்கா அல்ல, சுத்தமாக வாழ்வதற்கே! ஆகவே, "நீங்கள் சுத்தமாக வாழவேண்டும்" என்ற கடவுளின் விருப்பத்தினாலேயே, அவர் உங்களை தனியாக பிரித்து வைத்திருக்கிறார். ஆனால், வாலிப ஆண்கள் சந்திக்கும் மிகப்பெரிய பிரச்சனை என்பது கண்களினால் வரும் இச்சையாகும்.

**1 தெசலோனிகேயர் 5:22**
**பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்.**
**கெட்டதாய் தோன்றுகிற அனைத்தையும் விட்டுவிடுங்கள்.**

உதாரணத்திற்கு, பெங்களூர் பட்டணத்தில் வண்டி ஓட்டிச் செல்வது என்பது மிகவும் கடினமானது. அவ்வாறு நீங்கள் காரை ஓட்டிச் செல்லும்பொழுது, ஒரு ஆவிக்குரிய மனநிலையோடு பயணிக்க நினைத்து, நீங்கள் காரில் நீங்கள் ஆராதனைப் பாடல்களைக் கேட்டுக்கொண்டு செல்லலாம். ஆனால், அதே நேரத்தில் நீங்கள் வெளியே கவனித்தால், ஒரு விளம்பரப் பலகையில் சிறிய காருக்குக்கு அருகில், கவர்ச்சியாக பெண் நிற்கும் காட்சியை நீங்கள் பார்க்கலாம். அதைப் பார்த்தவுடன் இவர்கள் கார் விற்பனைக்கு விளம்பரம் செய்கிறார்களா அல்லது அந்தப் பெண்ணை விற்பதற்கு விளம்பரமா என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். அதே நேரத்தில், உங்கள் கண்களை மூடினால் முன்னாடி செல்லும் வாகனத்தில் இடித்துவிடுவோமே என்று நீங்கள் பயப்படலாம்.

அதேபோல, நாம் காலையில் செய்தித்தாளை விரித்துப்பார்த்தால், முதல் பக்கத்தில் ஆரம்பிக்கும் கவர்ச்சிப் படங்கள், ஒவ்வொரு பக்கங்களாகத் தொடரும். சரி, வேறு செய்தித்தாளுக்கு மாறிப்பார்க்கலாம் என்றால், அதிலும் அதே நிலை. சரி, இன்டர்நெட்டில் செய்தி வாசிக்கலாம் என்று அதில் வரும் சில லிங்க்கை கிளிக் செய்தால், ஆபாச வலைத்தளங்களுக்கு நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஆகவே, இதற்கு என்னதான் தீர்வு?

ஞாயிறு பள்ளியில் நாம் பாடிய பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது:

*நம் சிறு கண்கள் எதைப் பார்க்கிறது! என்ற கவனம் தேவை!*
*நம் சிறு கண்கள் எதைப் பார்க்கிறது! என்ற கவனம் தேவை!*
*மேலிருக்கும் நம் அப்பா, நாம் என்ன பார்க்கிறோம் என்று*
*அன்போடு நம்மைப் பார்த்தக்கொண்டிருக்கிறார். ஆகவே,*
*நம் சிறு கண்கள் எதைப் பார்க்கிறது! என்ற கவனம் தேவை!*

இதுபோன்று ஞாயிறு பள்ளியில் நாம் கற்றுக்கொண்டவைகள் மிகமிக முக்கியமானவைகள். ஏனெனில், நாம் 50 வருடங்கள் கழித்து என்ன செய்வோம் என்பதைத் தீர்க்கதரிசனமாகக் கொண்டு சொல்லப்பட்டவைகள் அவைகள்.

நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று அடிக்கடி நமக்கு நாமே சொல்லிக்கொள்ள வேண்டும். நம்முடைய முதல் பார்வையை நாம் தவிர்க்க முடியாது, ஆனால் இரண்டாம் பார்வையை நம்மால் தடுக்க முடியும். அங்கே அப்படியொரு கவர்ச்சியான விளம்பரப் பலகை இருந்தது தெரியாமல், நாம் அதைப் பார்த்திருக்கலாம், ஆனால், அதன் கவர்ச்சியால் கவரப்பட்டு இன்னொருமுறை பார்ப்பது, நமக்குப் பிரச்சனையாகும். ஆகவே, நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள் என்ற உணர்வோடு, இரண்டாம் முறை பார்ப்பதை தவிர்த்து, நாம் சுத்தத்திற்கு என்று அர்பணித்த வாழ்வைக் காத்துக்கொள்ள வேண்டும். ஆமென்.

# திருமணத்திற்கு முந்தய காதல் வரைமுறைகள்

## இளைஞர்கள்

திருமணம் முடிக்கும் எண்ணத்தோடு நீங்கள் ஒருவரோடு பழகும்பொழுது, உடல்களால் நெருங்குவதைத் தவிருங்கள். மற்றவர்கள் பார்வையில் படக்கூடாது என்று ஒவ்வொரு இடங்களுக்குச் செல்வதை தவிருங்கள். நீங்கள் இருவர் மட்டும் ஓரிடத்தில் தனித்திருப்பதைத் தவிருங்கள். அதுவும், பூட்டிய அறைக்குள் இருப்பதை நிச்சயம் விட்டுவிடுங்கள். மற்றவர்கள் எல்லாம் அப்படிப் பழகுகிறார்களே என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், நீங்கள் வித்தியாசமானவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

சுத்தமாக வாழ்வதற்கு என்று நீங்கள் உங்கள் வாழ்வை அற்பணித்திருக்கிறீர்கள்.

## பெற்றோர்

பெற்றோர்களே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் வாலிபப் பிள்ளைகளிடம் நீங்கள் பேச வேண்டும். ஒருவேளை உங்கள் சபைப் போதகர்களிடம் நீங்கள் உதவி கேட்கலாம். ஆனால், அவர்கள் பொறுப்பில் உங்கள் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு, கடவுள் உங்களுக்கு என்று கொடுத்த பொறுப்பை தட்டிக்கழிக்காதீர்கள். சபை கடவுள் வார்த்தைகளைப் போதிக்கலாம். அவர்கள் ஆவியில் நிறைந்து வாழ நீங்கள் உதவ வேண்டும். உங்கள் பிள்ளைகள் கிறிஸ்துவில் வளர, முதிர்ச்சியடைய பெற்றோர்களாகிய நீங்கள்தான் பொறுப்பு.

ஒரு உதாரணத்திற்கு, உங்கள் மகன் திடீரென ஒரு பெண்பிள்ளையை தன் கல்லூரியிலிருந்து உங்கள் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வருகிறான். வந்து உங்கள் வீட்டின் பொது அறையில் உட்கார்ந்து பேசாமல், தன்னுடைய தனி அறைக்கு அவளைக் கூட்டிக்கொண்டு போய், கதவை சாத்திக்கொள்கிறான். ஒருவேளை அந்தப் பெண்ணை உபசரிக்க நீங்கள் விரும்பலாம். ஆனால், கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே இருக்காமல், வெளியே பொது அறையில் உட்கார்ந்து பேசுங்கள் என்று சொல்லவேண்டியது உங்கள் கடமை. அப்படிச் சொன்னால், ஒருவேளை மறுநாள் உங்கள் மகன் வீட்டிற்கு வராமல் போகலாம் என்ற பயம் இருக்கலாம். ஒருவேளை அவன் ஒழுங்காக சபைகளில் கலந்துகொள்கிறான், வாலிபர் கூடுகைகளில் கலந்துகொள்கிறான், மிகவும் நல்ல பையன், தவறாக அப்படி எதுவும் நடந்துகொள்ளமாட்டான் என நினைக்கலாம்.

பெற்றோர்களே! உங்கள் வாலிப பிள்ளைகளுக்கு ஹார்மோனின் தூண்டுதல்கள் அதிகம் என்பதை மறந்துவிடாதீர்கள். மேலும், சபைகளில் அவர்கள் ஹார்மோன் தூண்டுதல்களைக் குறைக்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்பதையும் மறந்துவிடாதீர்கள். ஒருவேளை அவர்கள் சபைகளில் ஒழுங்காக கலந்துகொள்ளலாம், ஆனால், அவர்கள் வீட்டில் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதற்கு நீங்கள்தான் பொறுப்பு. கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படி ஒழுக்கமாக சுத்தமாக வாழவேண்டும் என்று, வேதம் சொல்லுகிறதோ, அதை நீங்கள் பிள்ளைகளிடம் வலியுறுத்த

வேண்டும். எது சரி எது தவறு என்பதை சபை தன் பங்குக்கு வாலிபர்களுக்குப் போதிக்க வேண்டும். ஏனெனில், சபை என்னதான் அவர்களுக்குப் போதித்திருந்தாலும், எவ்வளவுதான் அவர்கள் தலைமீது கைகளைவைத்து ஜெபித்திருந்தாலும், ஒரு வாலிப ஆணும் பெண்ணும், தனியாக ஒரு அடைக்கப்பட்ட அறைக்குள் இருந்தால், அவர்கள் ஹார்மோன்கள் தூண்டப்பட்டு, ஒரு வினாடியில் அனைத்து போதனைகளையும் ஜெபங்களையும் ஒன்றுமில்லாமல் போகப்பண்ணும். தங்கள் பிள்ளைகளுடைய இந்த காரியங்களில் பெற்றோர்கள் தலையிடவேண்டியது மிகவும் அவசியம். இல்லையேல் உங்கள் வீட்டில் கடவுளுக்கு ஏற்ற தகுதியான வாழ்க்கைத் தரத்தை  உங்கள் வீட்டில் நிலைநாட்ட நீங்கள் தவறிவிடுவீர்கள்.

## திருமணமானவர்

திருமணமான தம்பதி தங்கள் திருமண வாழ்வில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழவேண்டும். ஒரு கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அற்பணிப்போடு வாழ வேண்டும். ஏனெனில், கிறிஸ்தவர்களாகிய நாம், வெளிச்சத்தின் பிள்ளைகள். நம்முடைய திருமண வாழ்விலும், திருமணத்திற்குட்பட்ட பாலுறவோடு மாத்திரம் ஒழுக்கமாக வாழ வேண்டும். பாலுறவு உணர்வுகள் கணவன் மனைவிக்கிடையே மாத்திரம் பூர்த்தியாக்கப்பட வேண்டும். பாலுணர்வு தேவைகளுக்காக, திருமணத்திற்கு வெளியே ஒருபோதும் வேறு எவரோடும் தேடாதிர்கள். மற்றவர்கள் அவ்வாறு வாழலாம் ஆனால், வெளிச்சத்தின் பிள்ளைகளாகிய நாம் வித்தியாசமானவர்கள். ஏனெனில், *ஆனால், அவரை நம்பி வாழும் நீங்களோ, அவருடைய சுத்தமான உலகிற்கு சொந்தமான இராஜாக்கள் போன்றவர்கள். அவருடைய சுத்தமான கோவிலில் வேலைசெய்யும் பூசாரிகள் போன்றவர்கள். முன்பு நீங்கள் இருள் நிறைந்த வாழ்க்கை வாழந்து வந்தீர்கள். ஆனால், இப்பொழுதோ, அவருடைய நல்ல குணங்களை மக்களுக்கு அறிவிக்கும்படியாக, நீங்கள் அவருடைய வெளிச்சத்தில் வாழவேண்டும் என்று தெரிந்தெடுத்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இப்பொழுது நித்தியக் கடவுளுடைய சொந்த சமுதாய மக்கள்* (1 பேதுரு 2:9) என்று வேதம் சொல்கிறது.

இருளில் வாழ்ந்த உங்களையும் என்னையும், வெளிச்சத்தில் வாழும்படியாக கடவுள் அழைத்திருக்கிறார். நாம் வெளிச்சமானவர்கள் என்றும் வெளிச்சன் பிள்ளைகளாக வாழ்கிறவர்கள் என்று வேதம் சொல்கிறது. நம்மைச் சுற்றி வாழ்கிறவர்களைவிட நாம் மிகவும்

வித்தியாசமாக வாழ்கிறவர்களாகும். நாம் வேலை செய்கிற இடமாக இருந்தாலும், தொழில் செய்கிறவர்களாக இருந்தாலும், வேலைக்காரர்களாக இருந்தாலும், எஜமான்களா இருந்தாலும், வீட்டைக் கவனிக்கிறவர்களாக இருந்தாலும், நம்மைச் சுற்றி வாழ்பவர்களைவிட, கடவுள் விரும்புகிறபடி நாம் வித்தியாசமாக வாழ்கிறவர்களாகும். ஒரு வாலிப பெண்ணாக, ஆணாக, பெற்றோராக, கணவன், மனைவியாக, நாம் வித்தியாசமானவர்கள். நாம் இந்த உலக கலாச்சாரங்கள் எதோடும் ஒத்துப்போகாமல், கடவுளுக்குச் சுத்தமாக வாழ அற்பணிப்புள்ளவர்கள். நாம் எதோடாவது ஒத்துப்போக நினைத்தால், அதில் சிக்கிக்கொள்வது நிச்சயம். நாம் இவ்வுலக கலாச்சாரம் எதோடாவது ஒத்துப்போக ஆரம்பித்தால், நம்மை நாமே சிறைப்படுத்திக்கொள்கிறோம்.

# ஆல் பீபிள்ஸ் சர்ச் பங்காளர்களே

ஆல் பீபிள்ஸ் சர்சின் ஊழியர்கள் உள்ளூர் திருச்சபை என்ற எல்லையை கடந்து இந்தியா முழுவதையும், குறிப்பாக வட இந்தியா முழுவதையும் சென்றடைந்துள்ளனர். அவர்களின் முக்கிய நோக்கம், (அ)தலைவர்களை பலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களுக்கு ஊழியத்தில் விருப்பம் ஏற்படச் செய்தல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தை கட்டமைத்தல். மேலும் இளைஞர்களுக்கான பயிற்சி கருத்தரங்குகள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கான மாநாடுகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. கூடுதலாக, பல ஆயிரம் புத்தகங்களின் பிரதிகள் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன, இது, வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகள் வளர உதவுகிறது.

ஒரு முறை உதவி அல்லது மாதாந்திர நிதி உதவி அனுப்புவதன் மூலம் நிதி ரீதியாக எங்களுடன் பங்காளராக உங்களை அழைக்கிறோம். நாடு முழுவதும் நாங்கள் செய்யும் இந்த வேலையில் எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பக்கூடிய எந்தத் தொகையும் பெரிதும் மதிக்கப்படும். உங்கள் உதவியை "ஆல் பீபிள்ஸ் சர்ச்" க்கு செலுத்த வேண்டியதை காசோலை / வங்கி வரைவு காசோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். எங்கள் வங்கி கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கி பரிமாற்றத்தின் ஊடாக உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**கணக்கு பெயர்: All peoples church**
**கணக்கு எண்: 0057213809**
**IFSC குறியீடு: CITI0000004**
**வங்கி:** சிட்டி வங்கி என்.ஏ., எண் 5, எம்.ஜி. சாலை, பெங்களூரு, கர்நாடகா **560001**

தயவுசெய்து கவனிக்கவும்: இந்தியாவை தளமாக கொண்ட வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஆல் பீபிள்ஸ் சர்ச்சால் ஏற்றுக்கொள்ள முடியும். உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, நீங்கள் விரும்பினால், உங்கள் பங்களிப்பு குறிப்பிட்ட எந்த APC ஊழிய பகுதிக்கு அல்லது இடத்திற்கு பயன்படுத்தப்பட விரும்புகிறீர்கள் என்பதை குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு apcwo.org/give என்ற இணையப் பக்கத்தை பார்வையிடவும்

மேலும், எப்போதுதெல்லாம் உங்களால் முடியுமோ எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்துக்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள். நன்றி, கடவுள் உங்களை ஆசீர்வாதிப்பாராக!

# இலவச வெளியீடுகள்

A Church in Revival*
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks*
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change*
Code of Honor
Divine Favor*
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling*
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God*
God Is a Good God
God's Word
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife*
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses-Don't Take Them
Open Heavens*
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith *
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus *
The Night Seasons of Life
The Power of Commitment*
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power*
The Wonderful Benefits of speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different*
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து புத்தகங்களும் இலவசமாக PDF -ஆக தரவிறக்கம் செய்ய எமது திருச்சபை வலைத்தளமான apcwo.org/books பார்க்கவும். இந்த வெளியீடுகள் வேறுபல மொழிகளிலும் உள்ளன. இவைகளை புத்தகவடிவில் இலவசமாகப் பெற எமது மின்னஞ்சல் அல்லது அஞ்சல் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

எமது திருச்சபை வலைத்தளம் apcwo.org-ல் இலவச ஒலி, ஒளி வடிவில் பிரசங்கங்களைக் கேட்கலாம், பிரசங்க குறிப்புகளைப் படிக்கலாம், டெலிவிஷன் நிகழ்ச்சிகள், மேலும் பலவைகளால் நீங்கள் பயனடையலாம்.

# ஆல் பீப்புள் சர்ச்சைப் பற்றி

ஆல் பீப்புள் சர்ச்சின் தரிசனம் பெங்களூர் பெருநகரத்திற்கு உப்பாக, ஒளியாக திகழவேண்டும் என்பதும், இந்திய தேசத்திற்கும், மற்ற தேசங்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றி குரல் எழுப்ப வேண்டும் என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும், வெளிப்பாடுகளோடும் கடவுளுடைய வார்த்தையில் எந்தக்கலப்படமும் இல்லாமல், முழுமையாக அதை மக்களுக்குச் சொல்லும் அர்பணிப்போடு ஆல் பீப்புள் சர்ச் செயல்பட்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள், ஆவியின் வரங்கள் மூலம் கடவுளுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிப்பதற்கு மாற்றாக, நல்ல இசையோ, புதுபுதுத் திறமைகளைக் காட்டி அறிவிப்பதோ, திறமையாகப் பேசுவதோ, நவீன கால ஊழிய உத்திகளோ மாற்றாக இருக்க முடியாது என்பது எங்கள் நம்பிக்கை (1 கொரி. 2:4-5; எபிரே. 2:3-4). எங்கள் கருப்பொருள் இயேசு கிறிஸ்து. மக்களுக்கு ஊழியம் செய்வது எங்கள் தலையாய நோக்கம், கிறிஸ்துவைப் போல வளர்ச்சியடைவதே எங்கள் நோக்கம்.

பெங்களூரை மையமாகக்கொண்ட ஆல் பீப்புள் சர்ச்சிற்கு இந்தியாவின் பல இடங்களில் கிளை சபைகள் உள்ளது. தற்போது எங்கெங்கே கிளை சபைகள் உள்ளது என்பதை அறிய www.apcwo.org/locations என்ற வலைத்தளத்திலோ, contact@apcwo.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவது மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம்.

# கடவுள் உங்களை நேசிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு, கடவுள் இவ்வுலகிற்கு ஒரு மனிதனாக வந்தார். அவர் பெயர் “இயேசு”. அவர் ஒரு பாவமும் செய்யாத ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார். இயேசு என்ற பெயரில், கடவுள் ஒரு மனித உடலில் வாழ்ந்தபடியால், அவர் சொன்னது, செய்தது அனைத்தும் கடவுள் எப்படிப்பட்டவர்? என்பதை நமக்குக் காட்டியது. அவர் பேசிய வார்த்தைகள் அனைத்தும், கடவுள் பேசிய வார்த்தைகளாகும். அவர் செய்தவைகள் அனைத்தும், கடவுள் செய்த செயல்களாகும். இந்தப்புவியிலே, இயேசு அனேக அற்புதங்களைச் செய்தார். கஷ்டகளில், வியாதிகளிலிருந்து அனேகரை அவர் குணப்படுத்தினார். குருடான கண்களைப் பார்க்கச் செய்தார்; கேட்க இயலா செவிகளைக் கேட்கச் செய்தார்; நடக்க இயலா கால்களை நடக்கச் செய்தார்; அனைத்துவித வியாதிகளையும் குணமாக்கினார். பசியோடிருந்த ஆயிரமாயிரமானவர்களுக்கு, அற்புதமாக ரொட்டியைப் பெருகச் செய்து, வயிறார சாப்பிட செய்தார்; புயலை அடக்கினார் இவ்வாறாக அனேக ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்.

அவர் செய்த அனைத்து செயல்களுமே, கடவுள் நல்ல கடவுள் என்பதை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது. மக்கள் நன்றாக, சுகமாக, சந்தோசமாக வாழவேண்டும் என்பதே கடவுளுடைய விரும்பம் என்பதையும் புரிந்துகொள்ளச் செய்தார். மனிதர்களுடைய தேவைகளை நிவிர்த்திசெய்வதே அவருடைய விருப்பமாகும்.

அப்படியென்றால், கடவுள் ஏன் மனிதனாக மாறி இவ்வுலகிற்கு வரவேண்டும்? இயேசு ஏன் இவ்வுலகில் வாழ வேண்டும்?

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்மைப் படைத்த கடவுளுக்குப் பிடிக்காதவைகளைச் செய்து பாவிகளாகிப்போனோம். பாவத்திற்கான எதிர் விளைவுகளும் உள்ளது. கடவுளுக்கும், நமக்கும் இடையில் பாவமானது தொடர்புகொள்ள இயலாத் தடையாக இருக்கிறது. இவ்வாறாக, பாவம் நம்மையும், கடவுளையும் பிரிக்கிறது. பாவம், நம்மைப் படைத்த கடவுளோடு நாம் தொடர்புகொள்ள இயலாது, நாம்மால் அவரைப் புரிந்துகொள்ள இயலாது தடுக்கிறது. ஆகவே, அனேகர்கள் இந்தக் குறையைத் தீர்க்க வேறுபல வழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

பாவத்தினுடைய மற்றொரு விளைவு, நித்தியமாக கடவுளைவிட்டுப் பிரிந்து வாழ்வதாகும். கடவுளுடைய நீதிமன்றத்திலே, பாவத்திற்கான தண்டனை, மரணமாகும். மரணம் என்றால் நித்தியமாக அவரைப் பிரிந்து நரகத்தில் வாழ்வதாகும்.

ஆனால், நல்ல செய்தி என்பது, நாம் அந்த பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளோடு தொடர்புகொண்டு அவரோடு சேர்ந்து வாழ இயலும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்” (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது, இவ்வுலகின் பாவங்கள் அனைத்திற்குமான விலைக்கிரயத்தை செலுத்திவிட்டார். பின்பு, அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கும்பொழுது, அவர் உயிரோடு இருக்கிறதை அனேகருக்கு காண்பித்து, பின்பு மீண்டும் பரலோகம் செல்கிறார்.

கடவுள் அன்பாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். எந்த மனிதனும் நரகத்திற்குச் செல்லவேண்டும் என அவர் விரும்புவதில்லை. ஆகவே, மனிதர்கள் அனைவரும் பாவத்திலிருந்து விடுபட்டு, பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்ற வழி ஏற்படுத்தவே, அவர் இந்த பூமிக்கு வந்தார். உங்களையும், என்னையும் போன்ற பாவ மனிதர்களை பாவத்திலிருந்தும், நித்திய அழிவிலிருந்தும் காப்பாற்றவே அவர் இப்புவிக்கு வந்தார்.

உங்கள் பாவத்திற்குரிய மன்னிப்பை இலவசமாக நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என வேதாகமம் கூறுகிறது. அது என்னவென்றால், நமக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்ததை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**“அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்”** (அப்போஸ்தலர் 10:43).

**“என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்”** (ரோமர் 10:9).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காகச் செய்ததை நம்பி, அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நீங்கள் உங்கள் பாவத்திற்கு கடவுளிடம் மன்னிப்புப் பெற்று, உங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்படுகிறீர்கள்.

இயேசு கிறிஸ்து, சிலுவையில் உங்களுக்காக என்ன செய்தார் என்று அவர் மீது உங்களுக்கு நம்பிக்கைவரும் தீர்மானத்தை எடுக்க பின்வரும் மாதிரி ஜெபத்தை நீங்கள் செய்யலாம். இயேசு கிறிஸ்து உங்களுக்காகச் செய்தவைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அவருடைய மன்னிப்பையும், பாவக்கறைகளிலிருந்து சுத்திகரிப்பையும் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவலாம். இந்த ஜெபம் நீங்கள் எப்படிச் ஜெபிக்கலாம் என்று உதவுவதற்கேயாகும். அதன்பின்பு, நீங்களே சொந்தமாக ஜெபிக்கலாம்.

என் வாழ்வை ஆளும் இயேசுவே! நீங்கள் சிலுவையில் எனக்காக என்ன செய்தீர்கள் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீங்கள் எனக்காக மரித்தீர்கள். நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற, உங்களுடைய விலைமதிக்க இயலா இரத்தத்தைச் என் பாவங்களுக்கு விலைக்கிரயமாகச் செலுத்தினீர்கள். உங்களை நம்புகிறவர்களுக்கு, பாவங்களுக்கான மன்னிப்பு கிடைக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது.

ஆகவே, நீங்கள் எனக்காக சிலுவை மரணத்தின் மூலம் செய்தவைகளையும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் செய்தவைகளையும் இன்று நான் நம்புகிறேன். நான் என்னதான் நல்ல செயல்களைச் செய்தாலும், என் வாழ்வை என்னால் காப்பாற்ற இயலாது என்பது எனக்குத் தெரியும். உங்களிடம் என் பாவத்திற்கான மன்னிப்பை பெற, என்னால் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

நீங்கள் எனக்காக மரித்தீர்கள், என் பாவத்திற்கான விலையைச் செலுத்தினீர்கள்; மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தீர்கள் என்று இன்று நான் மனதார நம்புகிறேன்; இந்த நம்பிக்கையின் மூலம், நீங்கள் என்னை மன்னிக்கிறீர்கள், என் வாழ்வைச் சுத்தமாக்குகிறீர்கள் என்று வாயாற அறிக்கையிடுகிறேன்.

நன்றி இயேசுவே! உங்களைத்த தொடர்ந்து நேசிக்க உதவுங்கள். உங்களை மேலும் அறிந்து, உங்களுக்கு உண்மையாய் வாழ உதவுங்கள். ஆமென்.


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play







*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# All Peoples Church Bible College
# apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீபிள்ஸ் சர்ச் பைபிள் கல்லூரி மற்றும் ஊழிய பயிற்சி மையம் (APC-BC), ஆவியால் நிறைந்து, அபிஷேகம் செய்யப்பட்ட, பரிசுத்த ஆவியின் அற்புத வல்லமையில் ஊழியம் செய்வதற்கான தயார்படுத்தல் மற்றும் மூல உபதேசத்தில் ஆழமான மற்றும் மேதமைத்துவத்தை வெளிப்படுத்தும்படி கடவுளுடைய வார்த்தையைப் படிப்பது. நாங்கள் நம்புவது என்னவென்றால், முழுமையான தேவ மனிதனாக ஒருவரை ஊழியத்திற்கு வளர்த்தெடுப்பது, கடவுளுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்ற செய்வது, மற்றும் அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களை நிகழ்த்துவது - இவை அனைத்தும் கடவுளுடனான நெருக்கமான உறவு மற்றும் பிணைப்பிலிருந்து தான் சாத்தியமாகின்றன என்பது தான்.

APC-BC இல் கூடுதலாக ஆழமான போதனைகள், கடவுளின் அன்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் இருப்பு மற்றும் கடவுளின் அற்புதங்கள் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டுவதன் மூலம் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்கள் மற்றும் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளின் அழைப்பை நிறைவேற்ற பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று படிப்புகளை வழங்குகிறோம்:

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் ஒரு ஆண்டு சான்றிதழ் (C.Th.)
- இரண்டு ஆண்டு இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் டிப்ளமோ (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் மூன்று ஆண்டு இளங்கலை (B.Th.)

ஒவ்வொரு வாரமும், திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:00 **மணி** முதல் பிற்பகல் 1 **மணி** வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தினமும் வந்து செல்லும் மாணவர்கள், நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் இல்லத்தரசிகள் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் மற்றும் பிற்பகல் 1 மணிக்குப் பிறகு உங்கள் அன்றாட பணியைத் தொடரலாம். தங்கி பயில விரும்பும் மாணவர்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனிதனி விடுதி வசதிகள் உள்ளன. வாரம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவர்கள் களப்பணி, சிறப்பு கருத்தரங்குகள், பிரார்த்தனை மற்றும் துதிஆராதனை அமர்வுகளில் பங்கேற்கின்றனர். பிற்பகல் அமர்வுகளில் தினம் வந்து செல்லும் மாணவர்கள் (குடியிருப்பு அல்லாத மாணவர்கள்) விரும்பினால் பங்கேற்கலாம், கட்டாயம் அல்ல. அனைத்து மாணவர்களும் வார இறுதி நாட்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் தேவாலயங்களில் சேவையாற்ற நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், தகுதிகள், கல்விச் செலவுகள் பற்றி தெரிந்துகொள்ள மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்குவது பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து எங்கள் இணைய பக்கத்தை பார்வையிடவும்: apcbiblecollege.org

APC-BC is accredited by the Nations Association for Theological Accreditation (NATA).

நீங்களும் நானும் கடவுளுக்கு சிறப்பான மக்கள். நீங்கள் கிறிஸ்துவை நம்பி வாழ்கிற ஒருவரானால், இந்த தகுதியை நீங்கள் பெறுகிறீர்கள். "நீங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியார்கள், ராஜா பரம்பரை, சிறப்பான பூசாரியின் தலைமுறை, சுத்தமான சமுதாயத்தார்கள், கடவுளுடைய சிறப்பான மக்கள்" என்று கிறிஸ்துவ வேத புத்தகத்தில் ஏன் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இருளான வாழ்வு வாழ்ந்த நம்மை ஆச்சரியமான வெளிச்சத்தில் வாழ அழைத்தவர் எவ்வளவு சிறப்பானவர், எவ்வளவு அதிசயமானவர், அவருடைய குணம் எவ்வளவு சிறப்பான குணம், என்று அவரைப் புகழ்ந்து பேசவும், மற்றவர்களிடம் சொல்லவும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

ஆசீஸ் ராய்ச்சூர்

All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: **apcwo.org**